மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

# வரலாறு

சுட்டெண் : ............................ | தரம் :- 09 | நேரம் : 2 மணித்தியாலம்

## பகுதி I

- ❖ எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்திலுள்ளே புள்ளடி (x) இடுக.

01. 16 ஆம் நூற்றாண்டில் அரச உரிமையொன்றின் மூலம் போர்த்துக்கலில் அரசனாகிய ஸ்பானிய நாட்டு மன்னன் யார்?
   1) மூன்றாம் பிலிப்   2) இரண்டாம் பிலிப்
   3) ஐந்தாம் பிலிப்   4) நான்காம் பிலிப்

Education கல்வி අධ්‍යාපන

02. கி.பி. 1815 கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிய பிரித்தானிய ஆளுநர் யார்.
   1) தோமஸ் மெயிட்லண்ட்   2) பிரட்றிக் நோத்
   3) ஜோன் டொயிலி   4) றொபட் பிறௌன்றிக்

03. கி.பி 1762 இல் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனை சந்திப்பதற்காக கண்டி இராச்சியத்துக்கு வருகை தந்த ஆங்கிலேய நாட்டுத்தூதுவன் யார்.
   1) ஜோன் பைபஸ்   2) ஹியு போயிட்
   3) றொபட் அன்ட்றூஸ்   4) கலன் அல்பஸ்

04. கி.பி 1848 ஜுலை மாதம் கொங்காலே கொட பண்டா ஸ்ரீ விக்கிரம சர்வசித்தி என்ற பெயருடன் முடி சூடிக்கொண்ட இடம்
   1) மாத்தளை   2) கண்டி   3) வாரியப்பொல   4) தம்புள்ளை

05. மாளிகாகந்த வித்தியோதய பிரிவேனாவை நிறுவியவர்
   1) வலானே சித்தார்த்ததேரர்   2) இரத்மலானை ஸ்ரீ தர்மலோக தேரர்
   3) ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கல தேரர்   4) மிக்கெட்டுவத்த குணானந்த தேரர்

06. பௌத்த மறுமலர்ச்சியுடன் இந்நாட்டின் நகரங்களில் பிரம்மஞான சங்கத்தால் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் **அடங்காதது**
   1) கொழும்பு ஆனந்தா வித்தியாலயம்   2) கண்டி தர்ம ராஜா வித்தியாலயம்
   3) காலி மஹிந்தா வித்தியாலயம்   4) கொழும்பு றோயல் கல்லூரி

07. "டெக்கான் கல்விச் சமூகம்" என்னும் அமைப்பை தோற்றுவித்ததோடு பாடசாலைகள் பலவற்றையும் உருவாக்கி இந்திய சுதந்திரப்போராட்டத்தில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.
   1) சுரேந்திரநாத் பெனர்ஜி   2) தாதாபாய் நவரோஜி
   3) பாலகங்காதர திலகர்   4) ஜவகர்லால் நேரு

kalvi.lk

08. கோவாவை மத்திய நிலையமாகக் கொண்டு நூற்றாண்டுக்கு மேலான காலம் இந்து சமுத்திரத்தின் வாத்தக ஏகாதிபத்தியத்தினை தமதாக்கிக் கொண்டவர்கள்
1) ஒல்லாந்தர் 2) ஆங்கிலேயர் 3) போர்த்துக்கேயர் 4) பிரான்சியர்

09. இங்கிலாந்தின் மன்னன் 2ஆம் சார்ள்ஸ் போர்த்துக்கேய இளவரசியான கத்தரினை திருமணம் செய்து கொண்டதன் விளைவாக போர்த்துக்கேயர் ஆங்கிலேயருக்கு நன்கொடையாக வழங்கிய இடம் எது.
1) கல்கத்தா 2) சென்னை 3) ஆக்ரா 4) மும்பாய்

10. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் நீர்ப்பாசனத் திணைக்களம் அமைக்கப்பட்ட ஆண்டு எது.
1) கி.பி 1900 2) கி.பி 1911 3) கி.பி 1902 4) கி.பி 1855

11. கண்டி இராச்சிய மன்னன் ஸ்ரீ.விரபாரக்கிரம நரேந்திரசிங்கன் தொடர்பான **தவறான** கூற்று.
1) இவரது ஆட்சிக்காலத்தில் நாயக்க வம்சத்தவரது அதிகாரம் மேலோங்கி இருந்தது.
2) இவர் குண்டசாலை இளவரசன் என அழைக்கப்பட்டார்.
3) இவர் கண்டி இராச்சியத்தின் இறுதிச் சிங்கள மன்னன் ஆவார்.
4) இவரது ஆட்சிக்காலத்தில் ஒல்லாந்தருடன் நட்புறவுடன் செயற்பட்டார்.

❖ **12 தொடக்கம் 14 வரையான தரப்பட்டுள்ள வினாக்களுக்கு "அ" மற்றும் "ஆ" என்னும் நிரல்களைப் பயன்படுத்தி அவற்றின் பொருத்தப்பாட்டிற்கு அமைய சரியான எழுத்தைத் தொடர்புபடுத்தி பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

12. நிரல் "அ" வில் இந்திய சுதந்திரப் போராட்டத்தலைவர்களும் நிரல் "ஆ" வில் அத்தகைய போராட்டத்தலைவர்களுடன் தொடர்புடைய தகவல்களும் தரப்பட்டுள்ளன. இவற்றினை தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1) பாலகங்காதரதிலகர் | A இந்தியாவின் மேன்மையானவர் |
| 2) ஜவகர்லால் நேரு | B அகிம்சை வாதப் போராட்டம் |
| 3) தாதாபாய் நவரோஜி | C கேசரி, மருதம் பத்திரிகைகள் |
| 4) மகாத்மா காந்தி | D "நேருவின் உலக வரலாறு" என்னும் நூல் |

1) C D A B 2) B C A D 3) D C B A 4) D C A B

13. நிரல் "அ" வில் ஐம்பெரும் விவாதங்கள் நடைபெற்ற இடங்களும் நிரல் "ஆ" வில் அவை நடைபெற்ற ஆண்டுகளும் தரப்பட்டுள்ளன. இவற்றினை தொடர்புபடுத்தினால் கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1) உதம் விட | A 1871 |
| 2) பத்தேகம | B 1873 |
| 3) பாணந்துறை | C 1865 |
| 4) கம்பளை | D 1866 |

1) B C A D 2) C D A B 3) D C A B 4) D C B A



பக்கம் 3 ஐப் பார்க்க

kalvi.lk

14. நிரல் "அ" வில் பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையில் நிகழ்ந்த அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களும் நிரல் "ஆ" வில் அத்தகைய யாப்புச் சீர்திருத்தங்களின் விசேட அம்சங்களும் தரப்பட்டுள்ளன. இவற்றினை தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1) கோல்புறூக் கமரன் யாப்பு | A வரையறுக்கப்பட்ட வாக்குரிமை |
| 2) மனிங் யாப்பு | B தேசிய அரசுப்பேரவை |
| 3) குறூமக்கலம் யாப்பு | C சட்டவாக்க சபை |
| 4) முதலாம் குடியரசு யாப்பு | D பிரதேச வாரித்தேர்தல் முறை |

1) B C A D  2) D C B A  3) C D A B  4) D C A B

15. இலங்கை 1955 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறும் போது இலங்கையின் பிரதம மந்திரியாக பதவி வகித்தவர் யார்.
1) சேர் ஜோன். கொத்தலாவல  2) டட்லி சேனநாயக்க
3) திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்க  4) S.W.R.D பண்டாரநாயக்க

16. இலங்கையில் மக்கள் வங்கி (People Bank) நிறுவப்பட்ட ஆண்டு எது?
1) கி.பி 1960  2) கி.பி 1961  3) கி.பி 1962  4) கி.பி 1963

17. 19வது சீர்திருத்தத்தின் பிரகாரம் இலங்கை சனாதிபதி ஒருவரின் பதவிக்காலம் (வருடங்களில்)
1) 6  2) 5  3) 5 ½  4) 4

18. இலங்கையில் கரையோரத்தினையும் கண்டியையும் ஒன்றிணைத்து ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்த அரசியல் யாப்பு எது?
1) கோல்புறூக்  2) மனிங்  3) குறூமக்கலம்  4) டொனமூர்

19. இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர்
1) N.M.பெரேரா  2) சேர். பொன். இராமநாதன்
3) சேர். பொன். அருணாசலம்  4) ஏ.ஈ. குணசிங்க

20. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் பல வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நிறுவப்பட்ட முதலாவது பலநோக்குத்திட்டம் எது?
1) மகாவலி அபிவிருத்தித்திட்டம்  2) கல்லோயா அபிவிருத்தி திட்டம்
3) விக்டோரியா அபிவிருத்தித்திட்டம்  4) மாதுறுஓயா அபிவிருத்தித்திட்டம்

(2X20=40 புள்ளிகள்)



பக்கம் 4 ஐப் பார்க்க

kalvi.lk

## பகுதி II

❖ **முதலாம்** வினா கட்டாயமானது.

❖ **முதலாம்** வினாவுக்கும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

❖ ***1* தொடக்கம் *6* வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமான இடங்கள் இலங்கைப் படத்தில் A – F வரை குறித்துக் காட்டப்பட்டுள்ளது. அக்கூற்றுக்களுக்கு பொருத்தமான ஆங்கில எழுத்துக்களையும் அந்த எழுத்துக் குறிக்கும் இடங்களின் பெயர்களையும் உங்களது விடைத்தாளில் குறிப்பிடுக.**

01. 1) ஆங்கிலேயர் தமது யுத்த நடவடிக்கை மூலம் கி.பி *1795* ஆகஸ்ட் *26*ம் திகதி இலங்கையில் முதலாவதாக கைப்பற்றிக் கொண்ட இடத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.

2) கி.பி *1818* இல் முதலாவது சுதந்திரம் போராட்டம் ஆரம்பித்த இடத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.


3) கி.பி *1822* இல் ஜோர்ஜ் பேர்ட் என்பவரால் முதன் முறையாக கோப்பித்தோட்டம் ஒன்றினை ஆரம்பித்த இடத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.

4) ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் வட பிரதேசத்தில் அமைந்து காணப்பட்ட கொமண்டரியைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.

5) ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கண்டி மன்னர்கள் இந்தியாவுடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகம் பயன்பட்ட இலங்கையின் வடமேற்கே அமைந்த துறைமுகத்தினைக் குறிக்கும். எழுத்தும் அதன் பெயரும்.

6) கறுவா அதிகம் விளைந்ததால் கண்டி மன்னனுக்கு கையளிக்காமல் ஒல்லாந்தர் தாமே வைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொண்ட இடத்தினைக் குறிக்கும் எழுத்தும் அதன் பெயரும்.

(6X2=12 புள்ளிகள்)






kalvi.lk

02. i) பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய கண்டி இராச்சிய ஆட்சியாளர்களை A, B, C ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A. ஜோரில் வான் ஸ்பில் பேர்ஜன் என்னும் ஒல்லாந்துத் தளபதியை கி.பி 1602 இல் சந்தித்த கண்டி இராச்சிய ஆட்சியாளர்

B. பிரித்தானியர் இலங்கைக்கு வரும்போது கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த ஆட்சியாளர்.

C. ஒல்லாந்தரிடம் இருந்து கப்பல்களைப் பெற்று உபசம்பதா பிக்குகளை அழைத்து வருவதற்கு சீயம் நாட்டுக்கு தூதுக்குழுவினை அனுப்பிய கண்டி இராச்சிய ஆட்சியாளர்.

(3 புள்ளிகள்)

ii) கி.பி 1766 ஆம் ஆண்டின் உடன்படிக்கையின் உறுப்புரைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii) ஒல்லாந்தரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நீதிமன்றத் தொகுதிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5 புள்ளிகள்)

03. i) பிரித்தானியருக்கு திருகோணமலைத் துறைமுகம் முக்கியத்துவம் பெற்றமைக்கான காரணங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானியர் ஆட்சியின் போது

A) முதலாவதாக நியமிக்கப்பட்ட ஆளுநரின் பெயரையும் அவர் நியமிக்கப்பட்ட ஆண்டினையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

B) இரண்டாவதாக நியமிக்கப்பட்ட ஆளுநரின பெயரையும் அவர் நியமிக்கப்பட்ட ஆண்டினையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iii) A) கி.பி 1818 ஆம் ஆண்டின் சுதந்திரப் போருக்கு வழிவகுத்த காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

B) கி.பி 1818 ஆம் ஆண்டின் சுதந்திரப் போராட்டத்தலைவர்கள் **இருவரின்** பெயரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

04. i) 19ம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த மிஷனரி அமைப்புக்களின் செயற்பாடுகள் வெற்றி பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii) பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக கேணல் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களால் ஆற்றப்பட்ட சேவைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இந்து சமய மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5 புள்ளிகள்)

05. i) பிரான்சியரால் இந்தியாவில் கோட்டைகள் நிறுவப்பட்ட இடங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii) கி.பி 1857 ஆம் ஆண்டில் சிப்பாய்க் கலகம் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii) இந்தியர்கள் மத்தியில் தேசிய உணர்வுகள் வளர்ச்சி அடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (5 புள்ளிகள்)


பக்கம் 6 ஐப் பார்க்க
kalvi.lk

06. i) கோல்புறூக் சீர்திருத்தங்களின் ஆலோசனையின் பேரில் இலங்கையில் உருவாக்கப்பட்ட ஐந்து மாகாணங்களில் **மூன்று** மாகாணங்களைக் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

ii) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் ஆலோசனைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

iii) சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் விசேட பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

07. i) கி.பி 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்பின் பிரகாரம் சனாதிபதியின் பாராளுமன்றம் தொடர்பான அதிகாரங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii) கி.ப 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட நீதிமன்றங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii) மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் நோக்கங்கள் **ஐந்தினைக்** குறிப்பிடுக.

(விளக்கம் தேவையில்லை)

(5 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk


தரம் 01 - 10
3ம் தவணை
REVISION | PAPER DISCUSSION
ஆரம்பம் - 01.12.2024
மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.
JOIN NOW
புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..
கட்டண விபரங்கள்
தமிழ் Medium
தரம் 01-02
2000/=
தரம் 03-05
2500/=
தரம் 06-10
3000/=
English Medium
தரம் 06-07
3500/=
Education
கல்வி
අධ්‍යාපන
KALVI.LK
WHATSAPP
075 287 1457